# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## கொழும்பில் 2000க்கும் அதிகமான பங்கேற்பாளர்களுடன் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்ட 12 ஆவது சர்வதேச யோகா தினம்

12 ஆவது சர்வதேச யோகா தின கொண்டாட்டம் 2026 ஜூன் 21 ஆம் திகதி கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் அதன் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்துடன் இணைந்து இலங்கை அரசின் சுகாதார அமைச்சு மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் துறை அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆரோக்கியத்துக்கு வயதெல்லை இல்லை என்பதை வலியுறுத்தும் "ஆரோக்கியமான முதுமைக்கான யோகா" என்ற இவ்வருட யோகா தின தொனிப்பொருள் சுட்டிக்காட்டும் அதேநேரம், வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிலும் இயக்கம், பலம், உள நலம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் யோகா மிக முக்கியமான வகிபாகத்தை கொண்டுள்ளது என்பதனை வலியுறுத்துகின்றது.

2. இந்நிகழ்வுகளில் கௌரவ விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பேராசிரியர் திரு கிரிசாந்த அபேசேன, இலங்கை பாராளுமன்றின் கௌரவ பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஷ்வி சாலி, கௌரவ பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் திரு சுந்தரலிங்கம் பிரதீப், கௌரவ பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் திரு நிசாந்த ஜயவீர, பாராளுமன்ற உறுப்பினர்கள், முப்படை அதிகாரிகள் , இலங்கை பொலிஸ், யோகா நிறுவனங்கள் மற்றும் ஏனைய சிரேஸ்ட பிரமுகர்கள் உள்ளிட்ட விருந்தினர்களுடன் இணைந்து இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இக்கொண்டாட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.

3. பரம தம்ம சைத்திய பிரிவேனாவின் பிரார்த்தனைகள் மற்றும் வணக்கத்துக்குரிய திரேந்திர கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் அமைதிக்காகவும் ஆரோக்கியத்துக்காகவும் வழங்கிய நல்லாசிகளுடன் இந்நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன. அதனைத் தொடர்ந்து உத்வேகமும் புத்துணர்ச்சியும் மிக்க யோகா மற்றும் தியான நிகழ்வுகள் இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த நிபுணர்களால் வழிநடத்தப்பட்டிருந்தன. இதில் பல்லாயிரக்கணக்கான யோகா ஆர்வலர்கள், பிரமுகர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு ஆரோக்கியம் மற்றும் ஐக்கியம் ஆகியவற்றின் பகிரப்பட்ட உணர்வினை வெளிப்படுத்தியிருந்தனர். கொழும்பில் நடைபெற்ற பிரதான நிகழ்வுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் காரியாலயங்கள் மற்றும் கண்டியில் உள்ள உதவி உயர் ஸ்தானிகராலயம் ஆகியவையும் 12 ஆவது சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களில் இலங்கை முழுவதும் உள்ள யோகா ஆர்வலர்கள் பங்கேற்பதை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்தன.

4. பிரதான நிகழ்வுக்கான ஒரு முன்னோட்டமாக இலங்கை அரசாங்கத்தின் சுகாதார அமைச்சின் கீழான ஆயுள்வேத திணைக்களம் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்துடன் இணைந்து 2026 ஜூன் 18 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் தனித்துவமிக்க நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தது. தொடர்ந்து இரண்டாவது வருடமாக இம்முறையும் இலங்கை முழுவதும் உள்ள 112 ஆயுள் வேத மருத்துவமனைகளில் சமநேரத்தில் யோகா அமர்வுகள் நடைபெற்றிருந்தன.

5. AYUSH தகவல் மையம் ஒன்றும் இம்முறை இங்கு அமைக்கப்பட்டதுடன் வருகைதந்தவர்கள் முழுமையான நலன் மற்றும் மருத்துவம் உள்ளிட்ட இந்திய

பாரம்பரிய முறைமைகள் தொடர்பாக பெறுமதியான தகவல்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர். சித்தாலேப ஆயுள்வேத மருத்துவ நிபுணர்கள் குழாம் இலவச ஆலோசனைகளை வழங்கியதுடன் ஆயுள்வேதத்தின் நன்மைகள் தொடர்பாகவும் முழுமையான சுகாதார பராமரிப்பு குறித்தும் சிறந்த விழிப்புணர்வை அவர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

6. 12 ஆவது சர்வதேச யோகா நிகழ்வுகளின் அங்கமாக அரச நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், தொழில் நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து கொழும்பில் 55 யோகா நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கான ஆதரவும் அனுசரணையும் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் வழங்கப்பட்டிருந்தது. பிரதான நிகழ்வுகள் தேசிய ஆயுள்வேத போதனா வைத்தியசாலை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், கோட்யாட் மரியட் கொழும்பு, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், கொழும்பு மாநகர சபை, இலங்கை மன்றக் கல்லூரி, மற்றும் ஏனைய பல நிறுவனங்களிலும் பிரதான நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்வுகளில் யோகா பயிற்சியாளர்கள், தொழில் வல்லுநர்கள், மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றதுடன், இது ஆரோக்கியம், அமைதி மற்றும் முழுமையான நல்வாழ்வு குறித்த செய்தியை மேலும் வலுப்படுத்துகின்றது.

7. இந்தியாவால் முன்னெடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 2014 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்ட நிலையில் அத்தீர்மானத்தின்படி, ஒவ்வொரு ஆண்டினதும் ஜூன் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இத்தீர்மானத்திற்கு 170க்கும் அதிகமான நாடுகள் ஆதரவளித்தன, இலங்கையும் அப்பெருமைக்குரிய இணை அனுசரணை வழங்கிய நாடுகளில் ஒன்றாகும்.

****

கொழும்பு
21 ஜூன் 2026